**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 02.03.2026.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 108/2024</u>**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜானகிராமன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | நரசிம்மன் | வயது | : | 59 |
| ஊர் | : | கீழ்ப்பு துப்பாக்கம் | தொழில் | : | வழக்கறிஞர் |

**<u>வா.சா. 1 (ஜானகிராமன்): பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் **பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி (பி.வா.சா.1) ஆவேன்.** எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.
(ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை)

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் 2 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆகிய முனுசாமி என்பவர் மீது நான் அவஎண் 120/2017 மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அவஎண்.120/2017ன் தீர்ப்பாணையை நிறைவேற்று மனு 39/2021 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி நிறைவேற்று மனுவில் ஜப்தி செய்யப்பட்ட சொத்தும் இந்த வழக்கில் உள்ள சொத்தும் வெவ்வேறு என்று சொன்னால் சரிதான். அதேபோல் இரு சொத்துக்களின் விஸ்தீரணமும் ஜக்பந்திகளும் வெவ்வேறு என்று சொன்னால் சரிதான். நான் ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது ஆவண எண் 1/2023 21.03.2023 தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான். அதனால் இருசொத்துக்களும் வெவ்வேறு என்பதனால் இந்த வழக்கின்படி தீர்ப்பளிக்க எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது**

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.02 16:43:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு